**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 36 / 2023**

**2025ம் வருடம் ஜூலை மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை**

ம.சா.2 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திருமதி. வனஜா என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| பெயர் | **வெங்கடேஷ்** | த/பெ | **ரவிச்சந்திரன்** |
|---|---|---|---|
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :–**

விபத்து இராமேஸ்வரம் – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சாலையில் அதிகமான போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றோம். விபத்து ஏற்பட்ட இடத்தின் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் பேரிகார்டுகள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பேரிகார்டுகள் போடப்பட்டுள்ளது என்பதால் அந்த இடத்தில்

மெதுவாகத்தான் வாகனங்கள் செல்ல முடியும் என்றால் சரிதான். நான் சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற அஜீத் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் அஜீத் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நான் சென்ற இருசக்கர வாகன ஓட்டுனர் அஜீத் என்பவரின் கவனக்குறைவல் ஏற்பட்டது என்பதால் மேற்படி அஜீத் தான் எனக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்தானது எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகமானது என்றால் சரியல்ல. இந்த விபத்து எதிர்மனுதாரர் ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்பதால் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நான்குவழிச்சாலையில் இராமேஸ்வரம் – மதுரை சாலையில் தென்புறம் உள்ள சாலையில் ஏற்பட்டது. பொதுவாக தேசிய நெடுஞ்சாலையை கடக்க வேண்டும் என்றால் இருபுறமும் வாகனம் வருகிறதா என்பதை பார்த்து கடக்க வேண்டும் என்றால் சரிதான். நாங்கள் இருபுறமும் பார்க்காமல் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**